இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 72 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 04 – சனிக்கிழமை 21 அக்டோபர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 72: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 04 - Saturday 21 October 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## திருவண்ணாமலையில் – வடக்கு மண்டல வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள்

# பயிற்சிப் பாசறைக் கூட்டம்: முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## நாளை நடைபெறுகிறது! 13 மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்!

**திருவண்ணாமலை, அக். 21-**

**திருவண்ணாமலையில் வடக்கு மண்டல – கழக வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம், நாளை (22.10.2023 – ஞாயிற்றுக்கிழமை) மிகுந்த எழுச்சியுடன் நடைபெறுகிறது.**

**முதல்வர் – கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இப்பயிற்சிப் பாசறைக் கூட்டத்திற்குத் தலைமையேற்று, கூட்டத்தின் நிறைவில் சிறப்புரையாற்றுகிறார்.**

**இப்பயிற்சிப் பாசறையில் – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 13 மாவட்டங்களின் வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.**

**இம்மாபெரும் பயிற்சிப் பாசறைக்கு – கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சருமான எ.வ.வேலு, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.**

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

திருவண்ணாமலையில் நடைபெறும் – வடக்கு மண்டல வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் குறித்து, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் விடுத்த அறிவிப்பு வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22-03-2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு. கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க விழாவை முன்னிட்டு, கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப்பட்டுள்ளது.

### வெற்றிகரமாக நடைபெறும் – 4வது பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, கடந்த ஜுலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் காங்கேயத்தில் – முறையே டெல்டா, தென் மற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடை பெற்று முடிந்தது.

அதனைத் தொடர்ந்து, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" வருகிற அக்டோபர் 22 – ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டம் – 606611, திருவண்ணாமலை ஒன்றியம், மலப்பாம்பாடி ஊராட்சியில் உள்ள அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள "கலைஞர் திடலில்", முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

### 13 மாவட்டங்களின் – வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பங்கேற்பு!

வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 13 கழக மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA 2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

> **கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள். அதற்கு உரிய பலன் உங்களைத் தேடி வரும்! இயக்கத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவர்களை கழகம் எப்போதும் கைவிடாது.**

இந்தப் பயிற்சிப் பாசறையில் பங்கேற்கும் மாவட்டங்கள் விபரம் வருமாறு:-

1. திருவண்ணாமலை வடக்கு
2. திருவண்ணாமலை தெற்கு
3. தர்மபுரி கிழக்கு
4. தர்மபுரி மேற்கு
5. கள்ளக்குறிச்சி வடக்கு
6. கள்ளக்குறிச்சி தெற்கு
7. கிருஷ்ணகிரி கிழக்கு
8. கிருஷ்ணகிரி மேற்கு
9. திருப்பத்தூர்
10. இராணிப்பேட்டை
11. வேலூர்
12. விழுப்புரம் வடக்கு
13. விழுப்புரம் தெற்கு

இவ்வாறு அந்த அறிவிப்பில் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

### 'நாற்பதும் நமதே!' கழகத் தலைவர் சூளுரை!

வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் 4வது பயிற்சிப் பாசறைக் கூட்டம், நாளை திருவண்ணா மலையில் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ள நிலையில் – மூன்றாவதாக, திருப்பூர் மாவட்டம் – காங்கேயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எழுச்சிப் பேருரையாற்றுகையில், கழகத் தலைவர் அவர்கள்,

**"பா.ஜ.க.வின் பாசிசத் திட்டங்கள் எல்லாவற்றிற்கும் ஆட்சியில் இருந்த போது தலையாட்டிவிட்டு, இன்றைக்கு பா.ஜ.க.வை எதிர்க்கின்ற மாதிரி மக்களிடம் காட்டிக்கொண்டு, மறைமுகமாக பா.ஜ.க தலைவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கும் கொத்தடிமைக் கூட்டத்திற்குக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே இந்தத் தேர்தலிலும் படுதோல்வியைப் பரிசாகத் தர வேண்டும்.**

**இதுவரை மக்களை ஏமாற்றிய பா.ஜ.க. – அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட இருக்கிறது. மக்களின் இந்தக் கோபத்தை நமக்கான வாக்குகளாக மாற்ற வேண்டிய கடமை வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களான உங்களுக்கு இருக்கிறது.**

**கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள். அதற்கு உரிய பலன் உங்களைத் தேடி வரும்! இயக்கத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவர்களை கழகம் எப்போதும் கைவிடாது.**

**இயக்கத்திற்காக ரத்த நாளங்களாக உழைக்கும் வாக்குச்சாவடி முகவர்களே! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களிடம் வேண்டு கோள் வைத்து உரையாற்றி இருக்கிறேன்.**

**அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது, நான் வெற்றிச் செய்தியைத்தான் கேட்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!**

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!"**

–என உணர்ச்சிபொங்கக் குறிப்பிட்டதை இவ்வேளையில் நினைவு கூர்வோம்!

கழகத் தலைவரின இவ்வைர வரிகளை நெஞ்சில் நிறுத்தி, கழகத் தலைவர் அவர்கள், அடுத்து வகுத்தளிக்கவுள்ள தேர்தல் வியூகங்களைச் செவிமடுக்க, 13 மாவட்டங்களின் வாக்குச்சாவடி கழகப் பொறுப்பாளர்கள் திருவண்ணாமலையில் திரளுகிறார்கள்.

---

### 20 லட்சம் வீடியோக்கள் யூடியூப் பக்கத்திலிருந்து நீக்கம்!

புதுடெல்லி, அக். 21-

இந்தியாவில் கடந்த ஏப்ரல் முதல் ஜுன் வரை விதிகளை மீறியதற்காக 20 லட்சம் வீடியோக்கள் யூடியூப் பக்கத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'கூகுள்' நிறுவனத்தின் யூடியூப் சமூக ஊடகத்தில், தினசரி செய்திகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட வீடியோக்கள் கிடைக்கின்றன. இதில், பார்வையாளர்களை அதிகம் பெற வேண்டும் என்பதற்காக, தவறான தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. சமூக வழிகாட்டுதலை மீறுதல் மற்றும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் வீடியோக்களை யூ டியூப் நிறுவனம் நீக்கி வருகிறது. அந்த வகையில், இந்தியாவில் கடந்த ஏப்ரல் முதல் ஜுன் வரை, விதிமுறைகளை மீறி பதிவேற்றம் செய்யப்பட்ட 20 லட்சம் வீடியோக்கள் யூடியூப் பக்கத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்தியாவில் கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் மட்டும், விதிகளை மீறிய காரணத்துக்காக, 19 லட்சம் வீடியோக்களை யூடியூப் நிறுவனம் நீக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

## முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு – கௌரவ

# முனைவர் பட்டம் வழங்க அனுமதி மறுப்பதா?

## ஆளுநருக்கு உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி கண்டனம்!

**சென்னை, அக். 21-**

**முதுபெரும் தலைவர் என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அனுமதி வழங்க ஆளுநர் மறுப்பதற்கு உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அவர்களின் அறிக்கை வருமாறு: –

1922 ஜுலை 15ல் பிறந்த மிகச் சிறந்த சுதந்திரப் போராட்டத் தியாகியும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கிட்டத்தட்ட 8 ஆண்டுகளை சிறையில் கழித்தவரும், நூறு வயதைக் கடந்தவரும், ஏழை எளிய மக்களுக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்தவரும், தமிழினத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவரும், மாணவத் தலைவரும், சிறந்த சட்டமன்ற உறுப்பினருமான என். சங்கரய்யா அவர்கள், நம் தமிழ் சமூகத்திற்கு ஆற்றியுள்ள ஒப்புயர்வற்ற சேவையை அங்கீகரிக்கும் விதமாக 18.08.2023 அன்று நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக் குழு (Syndicate) கூட்டத்தில் அவருக்கு கௌரவ முனைவர் பட்டம் (D.Litt) வழங்கப்படும் எனத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, பின்னர் 20.09.2023 அன்று நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் (Senate) கூட்டத்தில் எதிர்வரும் பட்டமளிப்பு விழாவில் திரு. என்.சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ முனைவர் பட்டம் (D.Litt) வழங்கப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் தீர்மானம்!

மேற்படி கௌரவ முனைவர் பட்டம் வழங்கும் அதிகாரம் மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம், 1965, அத்தியாயம் XX, தொகுதி I ல் ஆட்சிப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவ்வத்தியாயத்தில் கௌரவ முனைவர் பட்டயம் அல்லது சான்றிதழில் பல்கலைக்கழக வேந்தர் கையொப்பமிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் திரு.என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ முனைவர் பட்டம் (D.Litt) வழங்க அனுமதி கோரும் கோப்பு பல்கலைக்கழகத்தால் ஆளுநர் வேந்தர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போது, அவர் அதில் கையொப்பமிட மறுத்துள்ளார்.

### அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்!

மேற்காண் நிலையில் 02.11. 2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள பட்டமளிப்பு விழாவில், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு (Syndicate) மற்றும் ஆட்சிப் பேரவையில் (Senate) நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின்படி என்.சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ முனைவர் பட்டம் (D.Litt) வழங்குமாறு ஆளுநர் – வேந்தர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## அதானி குழும ஊழல் குறித்து

### நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரித்தால் உண்மை வெளிவரும்!

### காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, அக். 21-

அதானி நிறுவனத்தின் ஊழல் குறித்து நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை நடத்தினால் மட்டுமே அனைத்து உண்மைகளும் வெளிச்சத்திற்கு வரும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனமான அதானி குழுமம், பங்குச்சந்தைகளில் முறைகேட்டில் ஈடுபட்டு பங்குகள் விலையை உயர்த்தியதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன் பர்க் அமைப்பு கடந்த பிப்ரவரி மாதம் பரபரப்பு அறிக்கையை வெளியிட்டது. இதேபோல், வெளிநாட்டு நிறுவனம் மூலம் அதானி பங்குகளை மறைமுக முதலீட்டாளர்கள் வாங்கி விற்ற 2 நிகழ்வுகளை 'ஓ.சி.சி.ஆர்.பி.' என்ற அமைப்பு கடந்த ஆகஸ்ட் மாதம் அம்பலப்படுத்தியது.

இந்த நிலையில், இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் அதானி நிறுவனம் 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்துள்ளதாகவும், நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் செய்த மெகா ஊழலே, இந்தியாவில் மின் கட்டணம் உயர காரணம் என்றும் இங்கிலாந்தின் முன்னணி பத்திரிகையான "பைனான்சியல் டைம்ஸ்" ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

அதானி நிறுவனத்தின் ஊழல்கள் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அதானி பங்குச் சந்தை மோசடி குறித்த புகாரில் ஓ.சி.சி.ஆர்.பி. அமைப்பிடம் ஆவணங்களை கேட்டு செபி அமைப்பு கடிதம் எழுதியுள்ளதை சுட்டிக்காட்டி யுள்ளார்.

பங்குச்சந்தை மோசடியில் செபி அமைப்பு இனியும் காலதாமதமின்றி விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். அதானி நிறுவனத்தின் ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தினால் மட்டுமே அனைத்து உண்மைகளும் வெளிச்சத்திற்கு வரும் என்று ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.